**சீனாவின் எக்ஸிம் வங்கி (ஹுனான் கிளை) நிதியளித்த மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டம் - 2023**

---

சீனாவின் எக்ஸிம் வங்கி (ஹுனான் கிளை) நிதியளித்த மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பெருந்தெருக்களும் வீதி அபிவிருத்தியும் மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். 64.31 கிலோ மீற்றர் நீளமான வீதிகளை அகலமாக்கலும் மேம்படுத்துதலும் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். இதில் 62.06 கிலோ மீற்றர் RDA வீதிகள் மற்றும் 2.25 கிலோ மீற்றர் நீளமான மாகாண வீதகள் மற்றும் 13 எண்ணிக்கையான பாலங்களை மீள்நிர்மாணம் செய்தல் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது ஒப்பந்த இலக்கம் ஒன்று மற்றும் இரண்டு என 02 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 20,300 மில்லியனுக்குச் சமமான யூ.எஸ் டொலர் 100 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 17,930 மில்லியனுக்குச் சமமான யூ.எஸ் டொலர் 85 மில்லியன் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு செய்யப்பட்டது. ரூபா 2,370 மில்லியனுக்குச் சமமான யூ.எஸ் டொலர் 15 மில்லியன் மிகுதித் தொகையானது இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 நவம்பர் 29 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2020 நவம்பர் 28 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்ட வைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/ கணக்காய்வு அவதானிப்பு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | ரூபா 16,048.41 மில்லியன் பெறுமதியான 73.1 கிலோ மீற்றர் வீதிகள் மற்றும் 14 பாலங்கள் முறையே 2022 திசெம்பர் 31 ஆந் திகதி மற்றும் 2023 மார்ச் 31 ஆந் திகதிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட சொத்துக்களாக நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 16,048.41 | உடன்படுகிறேன். செயற்திட்டம் இச்சொத்துக்களை முறையே வீதிகளாகவும் பாலங்களாகவும் வகைப்படுத்தியிருந்ததுடன் இந்த விபரங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்காக அவர்களுக்கு கையளிக்கப்படும். | அனைத்து நிகழ்வுகளும் கொடுக்கல் வாங்கல்களும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க பதியப்பட்டுள்ளனவா என்பதனை நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 05 இன் 26(அ) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு நாணய விடயங்களானது இறுதியான நாணயமாற்று விகிதத்தினைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். எனினும் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய யூ.எஸ் டொலர் 11.58 மில்லியன் மீதியானது செயற்திட்ட முகாமைத்துவ (PMU) பிரிவினால் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு (ERD) அனுப்பிவைத்த இடைக்காகல கொடுப்பனவு சான்றிதழ் (IPCs) திகதியில் உள்ளவாறான இறுதி நாணயமாற்று விகித்தினைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,106.15 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2,106.15 | ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய யூ.எஸ் டொலர் 11.58 மில்லியன் மீதியானது இடைக்கால கொடுப்பனவு சான்றிதழினை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் நிலவிய நாணயமாற்று விகிதத்தினை கருத்தில் கொண்டு பரிமாற்றம் செய்யப்பட்டது. எனினும் தவறுதலாக இது இறுதி நாணயமாற்று விகித்தினைப் பயன்படுத்தி செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 05 இன் 26 ஆம் பிரிவின் படி அனைத்து நிகழ்வுகளும் கொடுக்கல் வாங்கல்களும் பதியப்பட்டுள்ளனவா என்பதனை கணக்காளர் நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரிவு 28(ஆ) இன் பிரகாரம் ஒரு சொத்தினை செயற்படுத்தும் இயலுமைக்கு கொண்டு வருவதற்கு அர்ப்பணிப்புச் செய்யக்கூடிய எந்தவொரு கிரயமும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயத்தில் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். எனினும் ரூபா 1,954.18 மில்லியன் தொகையான ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய மீதியும் ஆண்டிற்கான செயற்திட்ட முகாமைத்துவ செலவுகளும் பூர்த்திசெய்யப்பட்ட சிவில் வேலைகளின் பெறுமதிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சிவில் வேலைகளின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டதுடன் அதே தொகையால் நடைமுறை வேலைகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 1,954.18 | உரிய IPC பண அளிப்புக்களை பெற்றுக்கொண்டதன் பின்னரே பூர்த்திசெய்யப்பட்ட சிவில் வேலைகளின் சரியான கிரயத் தொகையினை அறிந்துகொள்ள முடியும். வழங்கப்பட்ட தொகையானது 2023-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு நன்கொடை வழங்குபவரினால் பண அளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே அத்தொகையானது பூர்த்தி செய்யப்பட்ட சிவில் வேலைகளின் பெறுமதிக்கு மாற்றப்படாது நடைமுறை வேலையாகப் பதிவு செய்யப்பட்டது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 28 ஆம் பிரிவின் படி அனைத்து நிகழ்வுகளும் கொடுக்கல் வாங்கல்களும் பதியப்பட்டுள்ளனவா என்பதனை கணக்காளர் நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை/ கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் இலக்கம் 753(1) மற்றும் (2) இன் பிரகாரம் சொத்துக்களை வழங்குதல் மற்றும் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பொதுப் படிவம் இலக்கம் 141 மற்றும் 219 | செயற்திட்டமானது ஒவ்வொரு வீதி மற்றும் பாலத்தின் கிரயத்தினை தனித்தனியாக வழங்காது ரூபா 16,048 மில்லியன் தொகையான 73.31 கிலோ மீற்றர் வீதிகளையும் 14 பாலங்களையும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளித்திருந்தது. அத்துடன் சொத்துக்களை மாற்றுவதற்காக பூர்த்தியற்ற படிவங்கள் பயன்படுத்தப்பட்டதுடன் நிதிப்பிரமாணங்களுடன் ஒப்பிடுகையில் சொத்துக்களைப் பொறுப்பேற்றலானது பூர்த்தியற்றதாக இருந்தது. | ரூபா 16,048.41 மில்லியன் பெறுமதியான பூர்த்திசெய்யப்பட்ட சிவில் வேலைகளின் ஒவ்வொரு வீதிக்கும் பாலத்திற்குமான கிரயத்திற்காக விபரமான கூற்று இதனுடன் இணைக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் தனிப்பட்ட சொத்துக்களின் விபரமான கிரயப் பட்டோலைகளுடன் சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்படுதல் வேண்டும். தாபன விதிக் கோவை அலகு II இன் அத்தியாயம் XLVII இன் 08 ஆம் பிரிவின் பிரகாரம் போதிய தகவல்கள் இல்லாது சொத்துக்களை கையளித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ii) | வெளிநாட்டு கடன் உடன்படிக்கையின் பிரிவு இலக்கம் 12.1(10) | செயற்திட்ட பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு நன்கொடையாளருக்கு செயற்திட்ட | கடன் உடன்படிக்கையின் படி கடன் வழங்குனரினால் விடுக்கப்பட்ட வேண்டுதலின் அடிப்படையில் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு கடன் | கடன் உடன்படிக்கையின் படி பூர்த்தியாக்கல் பொழிப்பு அறிக்கையினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பூர்த்தியாக்கல் பொழிப்பு அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையுமு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குனருக்கு (நன்கொடையாளர்) செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் அவ்வாறான வேண்டுதல் இன்னும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | நன்கொடையாளருக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நன்கொடையளிக்கும் முகவராண்யுடனான கடன் உடன்படிக்கையின் உறுப்புரை 2.3 | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட காலம் 2021 செப்தெம்பர் 28 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்த து. எனினும் செயற்திட்ட காலப்பகுதியானது 2022 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையும் நீடிக்கப்பட்டது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது நீடிக்கப்பட்ட செயற்திட்ட காலப் பகுதிக்குள் ஒப்பந்தத்ததை பூர்த்திசெய்ய முடியாதிருந்ததுடன் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு செயற்திட்ட காலப்பகுதியை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நீடிப்பதற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டுக் கொள்ளப்பட்டது. | கடன் காலப்பகுதியை நீடிப்பதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடமிருந் தும் நன்கொடையாளரிடமி ருந்தும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | மெகா செயற்திட்டங்களின் மீள்வியூகம் அமைத்தல் மற்றும் துரித்தப்படுத்துல் குழுவின் சிபாரிசு மற்றும் ‘‘செயற்திட்ட அலுவலகங்களையும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளையும் மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை’’ | செயற்திட்டம் 2023 சனவரி 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட்டு 2023 மார்ச் 31 ஆந் திகதியளவில் ஒப்பந்த பதவியினர்களின் சேவையை முடிவுறுத்துதல் வேண்டும். எனினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு உரிய திகதியில் மூடப்படாதிருந்ததுடன் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் சம்பளங்களுக்காவும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்தை பராமரிப்பதற்காகவும் ரூபா 9.06 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | நடைமுறை விடயங்களை கருத்தில் கொண்டு 2023-09-30 வரையும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினை செயற்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதற்கிணங்க செயற்திட்ட முகாமைத:துவ பிரிவு 2023-09-30 ஆந் திகதியளவில் மூடப்பட்டதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் செயற்பட்டது. | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் இவ்விடயம் தொடர்பாக முறையான புலனாய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 0.99 மில்லியன் தொகையான தளபாடங்களும் பொருத்திகளும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் நிதிக் கூற்றுக்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தன. எனினும் அச்சொத்துக்களை இந்த அறிக்கைத் திகதி வரையும் அதிகாரசபைக்கு பௌதீகரீதியாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகிறேன். ரூபா 0.99 மில்லியன் தொகையான தளபாடங்களும் பொருத்திகளும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட சொத்துக்களாக காட்டப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு சில வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. ஆகவே செயற்திட்டம் 2024 யூன் வரை சொத்துகளை பயன்படுத்த வேண்டியிருந்ததுடன் இச்சொத்துக்களை 2024-07-01 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களினூடாக சரியான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவபடிக்கை எடுத்தல் வேண்டும். |